**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 78/2023 P.W. 9/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பிரபா** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. நல்லதம்பி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.12.2023.**

அரசு தரப்பு வழக்கறிஞர் முன்னிலை இல்லை என்பதால் நிலைய பொறுப்பு அதிகாரி முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 லீலா தேசி எனது பஞ்சாயத்தில் உள்ள நபர். நான் பஞ்சாயத்து தலைவியாக உள்ளேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட ஆண் நபர் லீலா தேவியின் கழுத்தில் கிடந்த செயினை அறுத்த நபர் ஆவர். மற்றொரு குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு தெரியாது.

2. 05.11.2022 ம் தேதி லீலா தேவி வீட்டருகில் 100 நாள் வேலை திட்டம் நடைபெற்று கொண்டிருந்தது. நான் டெய்லி அங்கு போவேன். அப்போது பொம்பளைங்க அலறல் சத்தம் கேட்டது. நான் வேலையை கவனித்து கொண்டிருந்தபோது எனக்கு அந்த சத்தம் சரியாக கேட்கவில்லை. அப்போது விஜயகுமாரி இதற்கு முன்னால் கவுன்சிலராக இருந்தவர் அவரும் வேலைக்கு வந்திருந்தார், அவர் தான் என்னிடம் லீலா தேவி பாவப்பட்ட கிளவிகிட்டயிருந்து ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட ஆண் நபர் பறித்து கொண்டு சென்றதாக கூறினார். நான் நேரிட்டு எதையும் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை **இல்லை .**

**சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.**

**நீதித்துறை நடுவர்,**

**இரணியல்.**